ஆ) கொடுக்கப்பட்ட வினக்கள், உரிமைப்பிரச்சினைகள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படாதது குறித்து

திரு. மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, 11—7—1977 அன்று நான் போட்ட கேள்விக்கு இன்று வரையிலும் பதில் அளிக்கப்படவில்லை. இத்தனை நாட்களுக்குள் கேள்விகள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ஏதாவது விதிமுறை இருக்கிறதா? அல்லது, எப்போது வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்று விதிகள் சொல்லுகின்றனவா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதைப்பற்றிக் கேட்கிறீர்கள் என்பதே எனக்குப் புரியவில்லை. எந்தவிதி மீறப்பட்டிருக்கிறது என்று நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னால் நான் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும். வேறு ஏதாவது பிரச்சினைப்பற்றிக் கேட்கவேண்டுமென்றால் எனது அறையில் வந்து கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி: நேற்று ஒரு உரிமைப் பிரச்சினைப் பற்றிச் சொன்னேன்... அது என்னவாயிற்று என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது ஆய்வில் இருக்கிறது.

(திரு எம்.ஏ. லத்தீப் எழுந்திருந்தார்...)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. எம். ஏ.லத்தீப்: நாம் எல்லாம் அவசரமாக அறிந்து கொள்வதற்காக அரசின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக பல பிரச்சினைகளை ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலம் கொடுதிருக்கிறோம். அவசரமாக இவற்றை எல்லாம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று தான் ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறோம். இவைகளை எடுத்துக்கொள்வதில் ஏன் காலதாமதம் ஏற்படுகிறது. அரசின் தரப்பில் காலதாமதம் ஏற்படுகிறது என்றால் தாங்கள் அரசுக்கு அறிவுரை கூற வேண்டும். என் போன்றவர்கள் உடல்நலமில்லாமல் இருந்தும், எங்கே நான் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுக்கப்பட்டு விவாதிக்கப்பட இருக்கிறதோ என்ற கவலையில் கடமை உணர்ச்சியுடன் இங்கே வந்திருக்கிறேன். ஆனால் இங்கு எந்தத் தீர்மானமும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி உங்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அது தங்களுக்கு வந்து சேருவதில் ஒருவேளை தாமதம் இருக்கலாம். முக்கியமாக அவையில் மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும் நேரத்தில் என்னென்ன தீர்மானங்களுக்கு அனுமதி வழங்கவேண்டும், எதற்கு அனுமதி மறுக்கவேண்டும் என்று முடிவு செய்யக்கூடிய அதிகாரம் அவைத் தலைவருக்கு இருக்கிறது. எந்த முறையில் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கேட்டுத் தங்களுக்குத் தெரிவிக்கிறேன். இப்படிப்பட்ட பிரச்சினைகள் என் அறையில் வந்தும் தாங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

திரு மு. அரங்கநாதன்: அதைப்போலவே நானும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றி எனது அறையில் வந்து கேளுங்கள். அடுத்து கவன ஈர்ப்புத் தீர்மானம்.

3. கவன ஈர்ப்புகள்.

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் பிரச்சினை தீர்க்கப்படாததும், அவர்கள் உண்ணாவிரதமும், அதனால் ஏற்பட்ட பதட்ட நிலையும் குறித்து.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, பல்லவன் மற்றும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணத் தொகை கொடுத்துவிட்டு 1978 மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் ஊதிய உயர்வு உட்பட எல்லாக் கோரிக்கைகள் குறித்தும் பேசித் தீர்ப்பதென்று முடிவு செய்தபடி நடவடிக்கை எடுக்க வேண்டியதற்கு மாறாகத் தொழிற் சங்கங்களைக் கலக்காமல் ஊதிய உயர்வு போன்ற முக்கியக் கோரிக்கைகளை நீக்கி விட்டதாலும் மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் அவர்கள் பிரச்சினை தீர்க்கப்பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாலும் அவர்கள் மாநிலம் பூராவும் பல ஊர்களில் உண்ணாவிரதம் நடத்தியதுடன் அவர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த சில தொழிலாளர் சங்கங்கள் பல கோரிக்கைகளை 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலும் ஆகஸ்ட் திங்களிலும் எழுப்பின. அந்தக் கோரிக்கைகள் சென்னை தொழிலாளர் துணை ஆணையாளர் முன்னிலையில் சமரசப் பேச்சில் இருந்தது. பேச்சுவார்த்தை முடியு